செ.வெ.எண் :21/அக்டோபர் நாள் : 14.10.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**பிரதம மந்திரி குடியிருப்பு (ஆவாஸ் யோஜனா) திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதி பெறுவதற்கு தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் கூடிய இந்திய அரசின் நீலப்புரட்சி திட்டத்தின்கீழ், ஒருங்கிணைந்த மீனவர்களின் மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தில் மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தினை செயல்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பிரதான்மந்திரி குடியிருப்பு திட்டத்தின் வழிமுறைகளின்படி வீடு கட்டும் திட்டத்தில் பயன்பெற பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் மீனவர் அல்லது மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் பெயரில் குறைந்தது 300 சதுர அடி பரப்பளவு உள்ள தனிப்பட்டா அல்லது நிலம் இருக்க வேண்டும். பட்டா மற்றும் சிட்டா அவசியம்.

இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க விரும்பும் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் சம்மந்தப்பட்ட மீன்வள உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்று முழுமையாக பூர்த்தி செய்து 20.10.2020க்குள் அனுப்பி வைக்குமாறும், மேலும் இத்திட்டம் குறித்த கூடுதல் விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட மீன்வள உதவி இயக்குநர் அலுவலக வேலை நாட்களில் தொடர்பு கொள்ளுமாறும் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**